கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை

கலைகலாசார பீடம்

மூன்றாம் வருட இரண்டாம் அரையாண்டு சிறப்புக் கலைமாணித் தேர்வு
2010/2011 (MAR 2015)

01 JUN 2015

# PSS 3202 – தென்னாசிய அரசியல் விடயங்கள்

# (Political Issues of South Asia)

நேரம் : 03 மணித்தியாலங்கள்

பகுதி I இல் இருந்து ஏதேனும் மூன்று வினாக்களுக்கும், பகுதி II இல் இருந்து ஏதேனும் ஒரு வினாவிற்குமாக மொத்தமாக நான்கு வினாக்களுக்கு விடை தருக

---

## பகுதி - I

01.

அ) பிரித்தானியக் காலனித்துவத்தினால் தெற்காசியப் பிராந்திய நாடுகளில் ஏற்பட்ட சமூக, பொருளாதார, அரசியல் தாக்கங்களைச் சுருக்கமாக விளக்குக.

(10புள்ளிகள்)

ஆ) "பிரித்தானியக் காலனித்துவம் ஏற்படுத்திய தாக்கங்களுள் ஒன்றே இலங்கையின் இனமோதலுக்கான அடித்தளமாகும்" இக் கூற்றினை நீர் ஏற்பீரா? பொருத்தமான சான்றாதாரங்களுடன் விளக்குக.

(15புள்ளிகள்)

02.

அ) சார்க் அமைப்பின் கட்டமைப்பினை விளக்குக.

(10புள்ளிகள்)

ஆ) சார்க் அமைப்பு இதுவரை அடைந்துள்ள சாதனைகளை இனங்கண்டு விளக்குக.

(15புள்ளிகள்)

03.

அ) இராணுவ ஆட்சி என்ற பதத்திலிருந்து நீர் யாது விளங்கிக் கொள்கின்றீர்?

(07புள்ளிகள்)

ஆ) பாகிஸ்தான், பங்களாதேஷ் ஆகிய நாடுகளில் நேரடி இராணுவ ஆட்சி முறைமை தற்காலத்தில் தோல்வியடைந்து வருவதற்கான காரணங்களை இனங் கண்டு விளக்குக.

(18புள்ளிகள்)

04.

அ) அரசியல் மோதல் என்ற பதத்தைத் தெளிவுபடுத்துக.

(10புள்ளிகள்)

ஆ) தெற்காசியப் பிராந்திய நாடுகளுள் ஏதேனும் ஒன்றில் நிலவும் அரசியல் மோதல் பற்றி விளக்குக.

(15புள்ளிகள்)

## பகுதி- II

05. தெற்காசிய நாடுகளின் அதிகாரச் சமனிலையினைத் தீர்மானிப்பதில் இந்தியாவின் வகிபங்கினை பகுப்பாய்வு செய்க.

(25புள்ளிகள்)

06. இலங்கையில் அண்மையில் இடம்பெற்ற ஜனாதிபதித் தேர்தல் மூலம் நல்லாட்சிக்கான சூழல் தோன்றியுள்ளதாக கருதுகின்றீரா? பொருத்தமான உதாரணங்களுடன் தர்க்கம் செய்க.

(25புள்ளிகள்)